1992 ஏப்ரல் 20]

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியிலே இருக்கின்ற பெண்கள் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை செய்து முன்னேறுவதற்கு விருப்பமாக உள்ளனர். எனவே அப்படி கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்புவார்களேயானால், உடனடியாக நடவடிக்கை எடுத்து குறுகிய காலத்தில் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையாக அவர்கள் நெசவாளர்களாக இருப்பார்களானால் அவைகளைப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 560, டாக்டர் க. கோபால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

560—

நரிமணம் பகுதியில் கிடைக்கும் மின்சாரத்தை தஞ்சாவூர் மாவட்டம் முழுமைக்கும் பயன்படுத்த நடவடிக்கை.

*3280— டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம் முழுமைக்கும் விவசாயம் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு மின்சாரம் தடையின்றிக் கிடைக்க நரிமணம் பகுதியில் கிடைக்கும் மின்சாரம் பயன்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது நரிமணத்தில் கிடைக்கக்கூடிய எரிவாயு கொண்டு 5 கே.வி. அளவில் தான் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இதை அதிகமாகத் தயாரிக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா? மேலும் அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் மத்திய அரசிடம் இருந்து ராயல்டி தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அது

போல் தமிழ்நாடும் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நரிமணத்திலே இருக்கின்ற எரிவாயுவை வைத்து தஞ்சை நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் வெங்கடகால் கிராமத்தில் இந்த மின் உற்பத்தி நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டு தஞ்சைக்கு மின்சாரம் வழங்கிக்கொண்டு இருக்கிறோம். இதில் ஏற்கெனவே 66 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு நிலையம் அமைந்திருக்கிறது. ஆனால் தஞ்சையைப் பொறுத்தமட்டிலே தற்போது தேவை 120 மெகா வாட் மின் உற்பத்தி தேவை இருக்கிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 204 மெகா வாட் வேண்டியிருக்கிறது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் இப்போது அனைத்து மின்சாரமும், அந்த பகுதியிலே பெறுகின்ற மின்சாரமும் தஞ்சை மாவட்டத்திற்கும், காயிதே மில்லத் மாவட்டத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துச் கொள்கிறேன். தற்போது தஞ்சை மாவட்டத்திலே, காயிதே மில்லத் மாவட்டத்திலே உள்ள தேவையை அனுசரித்து மாற்று முறை வைத்தும் மின்சாரம் வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் மத்திய அரசிடமிருந்து 'ராயல்டி' தொகை பெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாடும் அதுபோல பெற வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நரிமணத்தில் இருந்து நமக்கு கிடைக்கக் கூடிய எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று நாகப்பட்டினம் காயிதே மில்லத்

மாவட்டத்திலுள்ள கோவில்களப்பாலில் அதுபோன்ற எரிவாயு கிடைக்கிறது. அங்கேயும் மின்சாரம் தயாரிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற அந்த எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற நிலையத்தைத் தவிர இன்றைக்கு பிள்ளைப்பெருமாள் நல்லூரில் 600 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு ஏற்கெனவே 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு மத்திய திட்டக் குழுவினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, பிள்ளைப் பெருமாள் நல்லூரில்தான் இந்த மின் உற்பத்தி நிலையத்தை நுவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 561, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

561—

மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்தல்.

*4466—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையம் ஒன்றியத்தில் டிரான்ஸ்பார்மர்கள் சரியாக செயல்படாததால் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருப்பதால் கிராமப் பகுதிகளில் மின்வெளிச்சம் இல்லாத நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ‘ ஆம் ’